FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவி.தொ.பிரிவு 154 ன்படி)

TAMIL NADU POUCE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040852

C

Under Section 173 BNSS

1. District : Pudukkottai PS: V & AC Year: 2025 FIR No.: 1 Date: 18-07-2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act-1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 11-10-2023 Date to : 09-12-2023
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 01-07-2024 Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Through to Preliminary Enquiry
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 1 KM East
Beat Number : (b) Address : Municipality Corporation office, Pudukkottai
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : J. Jawahar (b) Father's/ Husband's Name : P. Jayaraman
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1978 (d) Nationality : Indian (e) Passport No. : –
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspector of Police (g) Address : V & AC, Pudukkottai
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. S. Vijayavaratharajan, Formerly Town Planing Inspector, Pudukkottai Municipality, Pudukkottai District. [Now, Town Planing Inspector Kulithalai Municipality, Karur District]

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Due to Preliminary Enquiry was Conducted.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed A. Peter Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு, எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்புட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18.07.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் J.Jawahar
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police,
VAC, Pudukkottai.

பணிந்து அனுப்பப்படுகிறது,

நான் இன்று 18.07.2025–ஆம் தேதி 11.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் பணியில் இருந்த போது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இய்க்கநரக உத்தரவு படி வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு:– புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம், எண்.7/25, புதுத்தெருவைச் சேர்ந்த சின்னப்பிள்ளை மகன் திரு.Dr.C.கார்த்திக்கேயன் என்பவரது 08.12.2023–ஆம் தேதியிட்ட புகாரில் புதுக்கோட்டையைச் சேர்ந்த டாக்டர்.கார்த்திக்கேயன், திரு.கண்ணன், மற்றும் ஸ்டீபன்சுரேஷ் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து புதுக்கோட்டை, பிளாட் எண்.37, எழில் நகர், இராஜகோபலபுரம் என்ற முகவரியில் வீடு கட்டுவதற்கு நகராட்சி அலுவலகத்தில் கட்டிட அனுமதி கேட்டு புதுக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவில் விண்ணப்பம் செய்ததாகவும், மேற்படி விண்ணப்பத்திற்கான கட்டிட அனுமதிக்கு பரிந்துரை (Plan Approval) செய்வதற்கு புதுக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.விஜயவாதராஜன் (தற்போது நகரமைப்பு ஆய்வாளர், குளித்தலை நகராட்சி, கரூர் மாவட்டம்) என்பவர் நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளர்களான (தனிநபர்கள் / Private Individuals) திரு.முருகேசன், திரு.வெள்ளைச்சாமி, திரு.விக்டர், திரு.வெங்கடேசன், திரு.மணிவண்ணன் ஆகியோர்களுடன் சேர்ந்து லஞ்சமாக ரூ.2,50,000/– கேட்டு பெற முயன்றதாக டாக்டர்.திரு.கார்த்திக்கேயன் என்பவர் அனுப்பிய புகாரின் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமூனா எண்.PE.50/2024/LB/PK நாள்.26.06.2024 உத்தரவின்படி, புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ஜெ.ஜவஹர் ஆகிய என்னால் துவக்கக்கட்ட விசாரணை 01.07.2024 அன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அதில் டாக்டர் திரு.கார்த்திக்கேயன் மற்றும் அவரது நண்பர்களான திரு.கண்ணன், திரு.ஸ்டீபன் சுரேஷ் ஆகியோர்கள் புதுக்கோட்டை டவுன் & நகராட்சி, எழில் நகர் மனைபிரிவில் (நகரளவை எண். 6087/33) எண்.37 மனையில் புதிய வீடு கட்ட அனுமதி வேண்டி, பொறியாளர் சுப்பிரமணியன் மூலம் அவரது நண்பரான புதுக்கோட்டை நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளரான திரு.முருகேசன் என்பவர் மூலம் இணையதளவழியாக ஒற்றைச்சாளர முறையில் (Single Window Portal) 13.09.2023–ஆம் தேதி விண்ணப்பித்துள்ளார். அவ்வாறு விண்ணப்பம் செய்ததில் நகரமைப்பு ஆய்வாளர் திரு.விஜயவரதராஜனின் வற்புறுத்தலால் விண்ணப்பத்தாரர்களுடைய கைபேசி எண் மற்றும் இமெயில் ID பதிவேற்றம் செய்வதற்கு பதிலாக திரு.முருகேசன் அவரது கைபேசி எண் மற்றும் இமெயில் ID ஆகியவற்றை பதிவேற்றம் செய்துள்ளார்.

ஒற்றைச்சாளர முறையில் (Single Window Portal) விண்ணப்பித்து கட்டிட அனுமதி பெறுவதற்கு சம்மந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களை நேரடியாக சந்திக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் நகரமைப்பு ஆய்வாளர் திரு.விஜயவரதராஜன், நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளரான திரு.சுப்பிரமணியனிடம் மேற்படி இடத்திற்கு கட்டிட அனுமதிக்கு பரிந்துரை செய்வதற்கு விண்ணப்பதரார்களை சுப்பிரமணியனின் அலுவலகத்தில் வைத்து சந்திக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். அத்தகவலை முருகேசன் மற்றும் விண்ணப்பதாரர்களிடம் சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். அதன்பேரில் 11.10.2023–ஆம் தேதி புதுக்கோட்டை மேலராஜ வீதியில் உள்ள தனரெத்னா காம்ப்ளக்ஸில் சூர்யா கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் உள்ள தனது அலுவலகத்திற்கு விஜயவரதராஜன் வரச்சொன்னதால் விண்ணப்பதரார்களான திரு.கண்ணன், டாக்டர் திரு.கார்த்திக்கேயன் மற்றும் முருகேசன் ஆகியோர்கள் வந்துள்ளரர்கள். அப்போது மதியம் சுமார் 2 மணியளவில் அங்கு வந்த நகரமைப்பு ஆய்வாளர் விஜயவரதராஜன் மேற்படி கட்டிடத்திற்கான அனுமதி வழங்க பரிந்துரை செய்ய வேண்டுமானால் ரூ.2,50,000/– லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று விண்ணப்பதாரர்களிடம் வற்புறுத்தியுள்ளார். அதற்கு விண்ணப்பதாரர்கள் அரசின் நடைமுறைகளின் படி அனைத்து ஆவணங்களையும் விபரங்களையும் முறையாக வழங்கியுள்ளோம் என்றும், அரசு நிர்ணயிக்கும் கட்டணம் எவ்வளவாக இருந்தாலும் செலுத்துவதற்கு தயாராக உள்ளோம் என்றும், லஞ்சம் கொடுத்து அனுமதிபெற விருப்பமில்லை என்றும் தெளிவாக சொல்லியுள்ளார்கள். ஆனால் அதனை ஏற்காமல் விஜயவரதராஜன் விண்ணப்பிக்கும் போது முதலில் பரிசீலனை செய்யும் டவுன்பிளானிங் இன்ஸ்பெக்டர் பணியும், அதற்கு அடுத்த நிலையில் பரிசீலனை செய்யும் பணியும் கூடுதல் பொறுப்பாக தானே பார்த்துவருவதாகவும், அவர் கேட்ட லஞ்சப்பணத்தை தரமறுத்தால் ஏதாவது காரணத்தை கூறி நிராகரிக்க வேண்டுமென ஆணையருக்கு பரிந்துரை செய்வேன் என்றும், தன்னை மீறி உங்களால் கட்டிட அனுமதி பெற இயலாது என்றும், கோபமாக பேசியுள்ளார். அப்போது விண்ணப்பதாரர்கள் தங்களுடைய நிலைப்பாட்டை தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில், விஜயவரதராஜன் இன்னும் கடிந்து கொண்டு கட்டாயப்படுத்தி ரூ.2,00,000/–மாவது கொடுங்கள் என்று கேட்டுள்ளார். அதன்பிறகு விண்ணப்பதாரர்கள் வேறுவழியின்றி ரூ.50,000/– தருவதாக சொல்லியுள்ளார்கள். அப்போது விஜயவரதராஜன் நான் என்ன காய்கறி வியாபாரமா செய்கிறேன், உங்களது விண்ணப்பத்தை நிராகரிக்க பரிந்துரை செய்யப்போகிறேன் உங்களால் முடிந்ததை செய்துகொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கோபமாக எழுந்து சென்றுள்ளார். அதன்பிறகு 16.10.2023–ஆம் தேதியில் மேற்படி கட்டிட வரைபடத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக பொறுத்தமற்ற காரணத்தை கூறி

விண்ணப்பமானது விஜயவரதராஜனால் நிராகரிக்க பரிந்துரைக்கப்பட்டு, நகராட்சி ஆணையரால் நிராகரிக்கப்பட்டுள்ளது (Rejected) என்பது விசாரணையில் தெரியவந்தது.

அதன்பிறகு விண்ணப்பதாரர்கள் நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளரான வெள்ளைச்சாமி என்பவரிடம் எழில் நகரில் உள்ள இடத்தில் வீடு கட்ட அனுமதிக்காக முருகேசன் என்பவர் மூலம் நகராட்சியில் விண்ணப்பித்தாகவும், நகரமைப்பு ஆய்வாளர் விஜயவரதராஜன் ரூ.2,00,000/- லஞ்சம் கொடுத்தால் தான் கட்டிட அனுமதி கொடுக்க பரிந்துரை செய்வேன் என்றும், அதற்கு தாங்கள் அவர் கேட்ட பணத்தை கொடுக்காததால் 16.10.2023-ஆம் தேதி விண்ணப்பத்தில் உள்ள கட்டிட வரைபடத்திலும், ஆவணத்திலும் சில குறைபாடுகள் இருப்பதாக பொறுத்தமற்ற காரணத்தை கூறி விண்ணப்பத்தினை நிராகரிக்க பரிந்துரை செய்து (Reject) விட்டதாகவும், அதனால் நீங்கள் மீண்டும் விண்ணப்பித்து தருமாறு கேட்டுள்ளார்கள். அதற்கு வெள்ளைச்சாமி ஏற்கனவே விண்ணப்பித்த முருகேசன் மற்றும் அவரது நண்பர் சுப்பிரமணியனிடம் கேட்டுள்ளார். அவர்களும் விண்ணப்பதாரர் சொல்லியது போலவே விஜயவரதராஜன் கட்டிட அனுமதி வழங்க பரிந்துரை செய்வதற்கு லஞ்சம் கொடுக்காததால், அனுமதி வழங்க பரிந்துரை செய்யவில்லை என்று சொல்லியுள்ளார். பிறகு புகார்தாரர்களிடம் விண்ணப்பிப்பதற்கு அனைத்து ஆவணங்களையும் கொடுங்கள் வெள்ளைச்சாமி விண்ணப்பித்து தருகிறேன் என்று சொல்லியுள்ளார். அதற்கு சேவைக்கட்டணமாக ரூ.5,000/- கேட்டுள்ளார். அதற்கு விண்ணப்பதாரர்கள் இரண்டு நாட்களில் உரிய ஆவணங்களுடன் வருவதாக சொல்லிவிட்டு சென்றுள்ளார்கள் என்பது விசாரணையில் தெரியவந்தது.

அதன்பிறகு புகார்தாரர் டாக்டர்.கார்த்திக்கேயன் அவரது கிளினிக்கில் சிகிச்சைக்காக வந்த தனபால் என்பவரிடம் எழில் நகரில் தனக்கும், தனது நண்பர்களுக்கு சொந்தமான இடத்தில் வீடுகட்டுவதற்கு கட்டிட அனுமதிக்காக முருகேசன் என்பவர் மூலம் நகராட்சியில் விண்ணப்பித்தாகவும், நகரமைப்பு ஆய்வாளர் விஜயவரதராஜன் ரூ.2,00,000/- லஞ்சம் கொடுத்தால் தான் கட்டிட அனுமதி கொடுப்பேன் என்றும், ஆனால் தாங்கள் லஞ்சம் கொடுக்காததால் 16.10.2023-ஆம் தேதி தங்களது விண்ணப்பத்தில் கட்டிட வரைபடத்திலும், ஆவணத்திலும் சில குறைபாடுகள் இருப்பதாக கூறி விண்ணப்பத்தினை நிராகரிக்க பரிந்துரை (Rejected) செய்துவிட்டதாக கூறியுள்ளார். அதற்கு தனபால் தனக்கு தெரிந்த நண்பரான நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளர் திரு.விக்டர் ஜெபராஜ் என்பவரிடம் விண்ணப்பிக்க இயலுமா என்று கேட்டு சொல்வதாக சொல்லியுள்ளார். அதன்பிறகு விக்டர்

ஜெபராஜ் தான் விண்ணப்பித்து தருவதாகவும், அதற்கு அனைத்து ஆவணங்களையும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பெற்றுள்ளார்.

அதனைத்தொடர்ந்து விக்டர் ஜெபராஜ் அனைத்து ஆவணங்களையும் எடுத்துக்கொண்டு, விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகளை பற்றி கேட்பதற்காக நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்பு ஆய்வாளர் விஜயவரதராஜன் அவர்களை சந்தித்து விபரம் கேட்டுள்ளார். அதற்கு விஜயவரதராஜன் அவர் ஏற்கனவே கேட்ட ரூ.2,00,000/- லஞ்சப் பணத்தினை விண்ணப்பதாரர்கள் கொடுத்தால்தான் அனுமதி வழங்க பரிந்துரைப்பேன் என்றும், இல்லாவிட்டால் மறுபடியும் நிராகரிக்க பரிந்துரைப்பேன் என்றும், விஜயவரதராஜனை மீறி நகராட்சி அலுவலகத்தில் யாரும், எதுவும் செய்யமுடியாது என்று சொல்லியுள்ளார். மேலும் விஜயவரதராஜன் விண்ணப்பிக்கும் போது உரிய விதிமுறைகளின்படி கட்டுமானம் செய்யாவிட்டால் கட்டிடத்தை இடித்துவிடுவதாக வாசகங்களை எழுதி விண்ணப்பதாரரிடமிருந்து அபிடவிட் ஒன்று பெற்று, பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும் சொல்லியுள்ளார். அதற்கு விக்டர் ஜெபராஜ் அதுபோல எந்த விதிமுறையும் இல்லையே சார் என்று சொல்லியுள்ளார். அதற்கு விஜயவரதராஜன் கட்டிட அனுமதி வேண்டுமென்றால் நான் சொல்வதை மட்டும் செய்யுங்கள், இல்லாவிட்டால் நான் தொடர்ந்து நிராகரிக்க பரிந்துரை செய்து கொண்டே இருப்பேன் என்று மிகவும் கோபமாகவும், கண்டிப்புடன் சத்தம் போட்டுள்ளார். மேற்படி விபரத்தை விண்ணப்பதாரரான கண்ணனிடம் விக்டர் ஜெபராஜ் சொல்லியுள்ளார். அதற்கு கண்ணன் தங்களுக்கு லஞ்சம் கொடுக்கவோ, விதிமுறைகளை மீறி விண்ணப்பிக்கவோ விருப்பம் இல்லை என்றும், இருந்தாலும் விஜயவரதராஜனை மீறி நகராட்சியில் எவ்வித கட்டிட அனுமதியும் பெற இயலாத சூழ்நிலை இருப்பதால்தான் அபிடவிட் எழுதி தருவதாகவும், அதையும் இணைத்து விண்ணப்பிக்குமாறு சொல்லியுள்ளார். அதன்பிறகு விக்டர் ஜெபராஜ், விஜயவரதராஜனால் நிராரிகப்பட்டதற்கு கூறப்பட்ட காரணங்கள் பொறுத்தமற்றதாக இருந்தாலும், அவைகளை சரி செய்து கடந்த 05.12.2023-ஆம் தேதி இணையதளத்தில் மீண்டும் விண்ணப்பித்துள்ளார். அதன்பிறகு நகரமைப்பு ஆய்வாளர் விஜயவரதராஜன், விக்டர் ஜெபராஜிடம் கட்டிட அனுமதிக்கு லஞ்சம் கொடுத்தால்தான் கட்டிட அனுமதிக்கு பரிந்துரைப்பேன் என்று விண்ணப்பதாரர்களிடம் தெரிவிக்கும்படி பலமுறை வற்புறுத்தியதால், அவரது நண்பர் தனபாலுவுடம் 06.12.2023-ஆம் தேதி கிளினிக்கில் சந்தித்து விஜயவரதராஜன் ஏற்கனவே கேட்ட ரூ.2,00,000/- லஞ்சம் கொடுத்தால்தான் கட்டிட அனுமதிக்கு பரிந்துரை செய்வேன் என்றும், கொடுக்காவிட்டால் எத்தனை முறை விண்ணப்பித்தாலும், தொடர்ந்து நிராகரிக்க பரிந்துரைத்துக்கொண்டே இருப்பேன் என்று அவர் சொன்ன விபரத்தினை சொல்லியுள்ளார். அதற்கு கார்த்திக்கேயன்

தன்னுடைய நண்பர்களிடம் இதுபற்றி கலந்து பேசி சொல்வதாக தெரிவித்துள்ளார். மேற்படிப நடந்த விபரங்களை விக்டர் விஜயவரதராஜனிடம் தெரிவித்துள்ளார். அதற்கு விண்ணப்பதாரர்கள் தான் கேட்ட லஞ்ச பணத்தை தருவார்கள் என்ற நம்பக்கையில்தான் அனுமதிக்கான பணிகளை செய்கிறேன் என்று விஜயவரதராஜன் சொல்லியுள்ளார். அதன்பிறகு விக்டரிடம் தொடர்ந்து லஞ்சம் கேட்டு வற்புறுத்தியதால் அந்த தகவல்களை 09.12.2023–ஆம் தேதி விக்டர் ஜெபராஜ், கார்த்திக்கேயனிடம் மீண்டும் தெரிவித்துள்ளார். அதற்கு அவர் தனக்கோ தனது நண்பர்களுக்கோ லஞ்சம் கொடுக்கவிருப்பமில்லை என்றும், இதுதொடர்பாக லஞ்ச ஒழிப்பு துறையிலும், நீதிமன்றத்திலும் புகார் கொடுக்க போவதாக கூறிய விபரத்தை விஜயவரதராஜனிடம் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி விண்ணப்பதரார்கள் லஞ்ச ஒழிப்பு துறையிலும், நீதிமன்றத்திலும் புகார் கொடுக்க போவதை தெரிந்து கொண்ட விஜயவரதராஜன் 09.12.2023–ஆம் தேதி அவரது அலுவலக IDயில் (2173004–VIJAYAVARATHA RAJAN S) மேற்படி விண்ணப்பத்தினை Created செய்து, அடுத்த கட்ட அலுவலரின் பரிந்துரைக்காக அன்றையதினமே அனுப்பியிருப்பதும், அந்த பரிந்துரைக்கான பதவிக்கும் அவரே கூடுதல் பொறுப்பாக இருப்பதால் அவருடைய அலுவலக IDயையே (2173004–VIJAYAVARATHA RAJAN S) பயன்படுத்தி, அவரே Verified செய்து பரிந்துரைக்காக நகராட்சி ஆணையரின் IDக்கு அனுப்பியுள்ளார். அதனை நகராட்சி ஆணையர் Approved செய்துள்ளார்.

அதன்பிறகு 12.12.2023–ஆம் தேதி மேற்படி கட்டிட அனுமதிக்கு கட்டணமாக ரூ.4,29,660/–ம் அரசுக்கு செலுத்த வேண்டும் என்று விக்டர் ஜெபராஜ் இ–மெயிலுக்கு தகவல் வந்ததை விண்ணப்பதாரர்களிடம் தெரிவித்து, அன்றைய தினமே விண்ணப்பதாரர்கள் ரூ.4,29,660/–த்தை Online மூலம் (Demand Notice No.Bpp/109/2023/023/0000301) செலுத்தியுள்ளார்கள். அதன்பிறகு 16.12.2023–ஆம் தேதி கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக விக்டர் ஜெபராஜ் இ–மெயிலுக்கு தகவல் வந்த விபரத்தை பார்த்து தெரிந்த கொண்டு, அதனை விண்ணப்பதாரர்களிடம் தெரிவித்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்தது.

மேலும் விண்ணப்பதாரர்களுக்கு லஞ்சம் கொடுத்து கட்டிட அனுமதி பெற விருப்பமில்லை என்று பலமுறை தெரிவித்தும், விஜயவரதராஜன் அதனை ஏற்காமல் லஞ்சம் கொடுக்காவிட்டால், மீண்டும் மீண்டும் விண்ணப்பத்தினை நிராகரிக்க பரிந்துரை செய்துகொண்டிருப்பேன் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில் கடந்த 06.12.2023–ஆம் தேதி பொறியாளர் விக்டர் மூலம் லஞ்சம் கேட்டு கட்டாயப்படுத்தியதால் 08.12.2023–ஆம்

தேதி விண்ணப்பதாரார்கள் லஞ்ச ஒழிப்பு துறையிலும், நீதிமன்றத்திலும் புகார் கொடுக்க போவதை தெரிந்து கொண்ட விஜயவரதராஜன் 09.12.2023–ஆம் தேதி கட்டிட அனுமதிக்கான விண்ணப்பத்தை இணையளதள வாயிலாக பரிந்துரை செய்து ஆணையருக்கு அனுப்பியுள்ளார், அதனை நகராட்சி ஆணையர் அனுமதி அளித்துள்ளார். அதனை தொடர்ந்து விண்ணப்பதாரார்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை 12.12.2023–ஆம் தேதி ரூ.4,29,660/–த்தை Online மூலம் செலுத்தியுள்ளார்கள். அதனைத்தொடர்ந்து 16.12.2023–ஆம் தேதி வீடு கட்ட கட்டிட அனுமதி ஆணையரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே குற்றச்சாட்டு அலுவலர் விஜயவரதராஜன் அவரது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி ரூ.2,00,000/– கேட்டு பெற முயற்சி செய்துள்ளார் என்பது விசாரணையில் தெரிய வந்ததின் பேரில் மேற்கண்ட எதிரி விஜயவரதராஜன் மீது குற்றவழக்கு தொடர முகாந்திரம் இருப்பதாக இயக்குநரகத்திற்கு அறிக்கை அனுப்பி வைத்ததன் பேரில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரக நமூனா எண். PE.50/2024/LB/PK நாள்:08.07.2025–ன்படி எதிரியின் மீது வழக்குப் பதிவு செய்ய உத்தரவிடப்பட்டதன் பேரில், இன்று 18.07.2025–ஆம் தேதி காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 01/2025 u/s 7 (a) of the Prevention of Corruption Act 1988 (as amended 2018) இன் படி என்னால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இதன் முதல் தகவல் அறிக்கையின் அசல், இயக்குநரக குறிப்பாணையின் நகல் ஆகியவற்றை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி புதுக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

18.07.2025

(ஜெ.ஜவஹர்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
புதுக்கோட்டை.